மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 436, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

436—

பேருந்து வசதி

***22443—திரு. எம். ரெங்கசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூரிலிருந்து கன்னியாகுமரி, குற்றாலம், கொடைக்கானல், ஊட்டி ஆகிய இடங்களுக்கு விரைவுப் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தஞ்சாவூரிலிருந்து–கன்னியாகுமரி, குற்றாலம், கொடைக்கானல் மற்றும் ஊட்டி ஆகிய இடங்களுக்கு அரசுப் பேருந்துகள் இயக்க, ஆய்வு செய்து, பயணிகளின் எண்ணிக்கைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.*

திரு. எம். ரெங்கசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், "Tamil Nadu Vision 2023" என்று தொலைநோக்குப் பார்வையோடு அறிவிக்கப்பட்ட திட்டத்தின்கீழ், உற்பத்தித் துறையில் *22* சதவிகித வளர்ச்சியை எட்டுகின்ற வகையில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்கள் பயன்பெற, நாட்டின் பொருளாதாரம் மேம்பட, பல புதிய திட்டங்களை அறிவித்தும், சிறப்புச் சலுகைகளை வழங்கியும், மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் ஒரே சீராக தொழில் வளர்ச்சி அடையும் வகையில், ஒன்பது தென் மாவட்டங்களில்

2013 மே 8]

தொழில் பூங்காங்கள் அமைத்திடவும், சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் முத்தான அறிவிப்புகளைத் தந்த புரட்சித் தாய், புதுமைத் தாய், (மேசையைத் தட்டும் ஒலி) தொழிற்புரட்சியின் புதிய விடியல், நாளைய பாரதம், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியிலே கல்லணை கட்டிய மாமன்னன் கரிகால் சோழனுக்கு, நேற்றைய தினம் மணிமண்டபம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டிய, காவேரியை மீட்டெடுத்த பெருவளத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பில் கோடானு கோடி நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூரிலிருந்து கன்னியாகுமரி, குற்றாலம், கொடைக்கானல், ஊட்டி போன்ற ஊர்களுக்கு நேரடியாக விரைவுப் பேருந்துகளை இயக்கித் தர வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூரிலிருந்து கன்னியாகுமரி, குற்றாலம், கொடைக்கானல் மற்றும் ஊட்டி ஆகிய இடங்களுக்குச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கை ஆய்வு செய்யப்பட்டு, பயணிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப, படிப்படியாக கன்னியாகுமரி, குற்றாலம், கொடைக்கானல், ஊட்டி போன்ற ஊர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று, பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.

திரு. எம். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய மேலான அனுமதியைப் பெற்று, தஞ்சாவூரிலிருந்து

கன்னியாகுமரி, குற்றாலம், கொடைக்கானல் மற்றும் ஊட்டி ஆகிய ஊர்களுக்குப் பேருந்துகள் இயக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுந்தூரப் பேருந்துகளில், தற்பொழுது மூன்று வயது குழந்தைக்கும் பயணச் சீட்டு எடுப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆனால், இரயிலில் பயணச்சீட்டு வாங்கும்போது, ஐந்து வயதுக்கு மேலே உள்ள குழந்தைக்குத்தான் பயணச் சீட்டு எடுக்கப்படுகிறது. மூன்று வயது குழந்தைக்கு இருக்கை கொடுத்தாலும், அக்குழந்தை பக்கத்திலுள்ளவரின் மடியில்தான் அமர்ந்து கொள்ளும் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும். எனவே, மூன்று வயது என்பதை, இரயில்வேயில் உள்ளதுபோல, ஐந்து வயதுக்கு மேலே உள்ள குழந்தைகளுக்குப் பயணச் சீட்டு எடுக்கலாம் என்பது குறித்து எதிர்காலத்தில் அரசு பரிசீலக்குமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய இந்தக் கருத்து, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 437, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.